**செ. கு. எண்**: 219 **நாள்**:01.12.2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 1.12.2011

சென்னை, திருவொற்றியூரில் **29.11.2011** அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த, சென்னை, எண்ணூரைச் சேர்ந்த திரு. ரங்கசாமி என்பவரின் மகன் மணிகண்டன் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. மணிகண்டன் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. மணிகண்டன் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், சென்னை மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் காலமான திரு. ரங்கசாமி என்பவரின் மகன் மணிகண்டன் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் திரு. ஆறுமுகம் என்பவரின் மகன்திரு. மணிகண்டனுக்கு 25,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**